ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

# மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

**21.09.2023**

தலைப்புச்செய்திகள்

1.மகளிர் இட ஒதுக்கீடு மசோதா பெண்களின் நம்பிக்கையை மேம்படுத்தும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோதி கூறியிருக்கிறார்.

2. மாநிலங்களவையில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா மீதான விவாதம் இன்று தொடங்கியது.

3. காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை நடைமுறைபடுத்துமாறு கர்நாடகத்திற்கு உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.

4. சென்னையில் நடைபெறும் சாலை மேம்பாடு, மழைநீர் வடிகால் பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று ஆய்வு செய்தார்.

5. கோவை நீலகிரி கன்னியாகுமரி மதுரை கிருஷ்ணகிரி தர்மபுரி உள்ளிட்ட 13 மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலைஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

**********

பிரதமர் நாடாளுமன்றம்

மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ள மகளிர் இட ஒதுக்கீடு மசோதா, பெண்கள் இடையே புதிய சக்தியையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோதி கூறியிருக்கிறார்.

மக்களவையில் இன்று உரையாற்றிய அவர் மத்திய அரசின் இந்த முடிவு நாட்டை புதிய உச்சத்திற்கு எடுத்துச்செல்லும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த மசோதா வெற்றிகரமாக நிறைவேற ஆதரவு அளித்த அனைத்து கட்சிகளுக்கும் பிரதமர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது இந்திய நாடாளுமன்றத்தின் 75 ஆண்டுகால வரலாற்றின் பொன்னான தருணம் என்று மகிழ்ச்சி தெரிவித்தார்.

மக்களவை உறுப்பினர்கள் அனைவரின் பங்களிப்பும் இதில் இருப்பதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

**********

நாடாளுமன்றம்

நாடாளுமன்றத்திலும் சட்டப்பேரவைகளிலும், மகளிருக்கு இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா மீதான விவாதம் மாநிலங்களவையில் இன்று தொடங்கியது.

முன்னதாக இந்த மசோதாவை மாநிலங்களவையில் தாக்கல் செய்து பேசிய மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு.அர்ஜுன் ராம் மெஹ்வால் மகளிரின் ஆளுமையை இந்த மசோதா உறுதி செய்வதாக குறிப்பிட்டார்.

மகளிர் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் இலவச சமையல் எரிவாயு திட்டம், முத்ரா வங்கி கடன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பிரதமர் திரு.நரேந்திரமோதி கொண்டுவந்துள்ளதாகவும் அவர் பாராட்டினார்.

ஆதி திராவிடர் பழங்குடியின மகளிருக்கு உள் ஒதுக்கீட்டின் கீழ், இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று கூறிய அவர், இதற்கு மக்கள் தொகை கணக்கெடுப்பும் தொகுதி மறுவரையறையும் மிகவும் அவசியம் என்றார்.

பிஜேபி உறுப்பினர் திரு.ஜே.பி.நட்டா பேசுகையில் இந்திய கலாச்சாரத்தில மகளிரின் பங்கு என்றுமே இன்றியமையாதது என்று குறிப்பிட்டார்.

அரசியல் ஆதாயத்தை பிஜேபி விரும்பவில்லை என்று கூறிய அவர், ஆனால் அதேவேளையில் மகளிரின் ஆளுமையே கட்சியின் குறிக்கோள் என்றும் கூறினார்.

கடந்த 9 ஆண்டுகளில் மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் முக்கிய முடிவுகளை நரேந்திரமோதி அரசு மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் உறுப்பினர் ரஞ்சித் ரஞ்சன் இம்மசோதாவிற்கு ஆதரவு அளித்து பேசுகையில் மகளிர் பிரதிநிதித்துவம் நாடாளுமன்றத்தில் அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இருப்பினும் இந்த மசோதா காலதாமதாக கொண்டுவரப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

திமுக உறுப்பினர் டாக்டர் கனிமொழிசோமு திரிணாமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சி உறுப்பினர்களும் இந்தவிவாதத்தில் பங்கேற்றனர்.

இந்த மசோதா குறித்த விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது.

**********

ஜக்தீப்தன்கர்

மாநிலங்களவையில் அவைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் வரலாற்று நிகழ்வாக மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவை முன்னிறுத்தி துணைத்தலைவர்களாக முற்றிலும் பெண்களை கொண்ட குழுவை இன்று நியமனம் செய்தார்.

மகளிர் இட ஒதுக்கீடு மசோதா தொடர்பான விவாதம் இன்று மாநிலங்களவையில் நடைபெறுவதால் இந்நடவடிக்கை.

இன்று ஒருநாள் மட்டும் செயல்படும் வகையில் 13 பெண்கள் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

**********

மக்களவை

மக்களவையில் சந்திரயான் 3 விண்கலத்தின் வெற்றி உட்பட இந்திய விண்வெளித்துறையின் சாதனைகள் தொடர்பான விவாதத்தை இன்று தொடங்கிவைத்து பேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் சந்திரயானின் வெற்றி நம் நாட்டின் மிகப்பெரிய சாதனை என்று குறிப்பிட்டார்.

நிலவின் தென் துருவத்தை எட்டிய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது என்று கூறிய அவர் இஸ்ரோ விஞ்ஞானிகள் மற்றும் இதுசார்ந்த அறிவியல் சமூகத்தை வாழ்த்தினார்.

இந்த விவாதத்தின் மீது பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு.சசிதரூர் நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியதன் மூலம் வரலாற்று சாதனையை சந்திரயான் படைத்ததாக பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு, பிரபல விஞ்ஞானிகள் விக்ரம்சாராபாய், சத்திஸ்தவான் ஆகியோரின் அளப்பரிய சேவைகளை அவர் நினைவு கூர்ந்தார்.

திமுக உறுப்பினர் திரு.ஆ.ராசா பேசுகையில் சந்திரயான் 3 விண்கலத்தில் பணியாற்றிய ஒட்டுமொத்த அறிவியல் குழுவிற்கும் பாராட்டு தெரிவித்தார்.

திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் பேராசியர் சவ்ஹதா ராய் பேசுகையில் சந்திரயானின் வெற்றி பல தசாப்தங்களாக செயலாற்றிய ஒட்டுமொத்த விஞ்ஞானிகளின் பணியை உள்ளடக்கியதாகும் என்று குறிப்பிட்டார்.

விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது.

**********

சிமெண்ட் மாநாடு

சர்வதேச சிமெண்ட் மாநாட்டை புதுதில்லியில் வரும் 2027 ஆம் ஆண்டு நடத்துவதற்கான ஏலத்தை இந்தியா வென்றுள்ளது.

பாங்காக்கில் தற்போது நடைபெற்றுவரும் 16ஆவது சர்வதேச சிமெண்ட் வேதியியல் மாநாட்டில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

டெல்லி இந்திய தொழில்நுட்ப கல்வி கழகம் மற்றும் தேசிய சிமெண்ட் கட்டமைப்பு குழுவினருடன் இணைந்து இந்த மாநாட்டை நடத்துவதற்கான ஏலத்தில் இந்தியா வெற்றிபெற்றதாக மத்திய வர்த்தக தொழில் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

சுவிட்சர்லாந்தையும் ஐக்கிய அரபு அமீரகத்தையும் பின்தள்ளி இந்த ஏலத்தில் இந்தியா வெற்றிபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சிமெண்ட் கான்கிரீட் பிரிவில் சர்வதேச சிமெண்ட் வேதியியல் மாநாடு மிகவும் கவுரவமிக்கதாகவும் உலக அளவில் கருதப்படுவது குறிப்பிடத்தக்கது.

**********

விருது

அறிவியல் தொழில்நுட்பம் படைப்பாற்றல் திறன்களின் கீழ் 13 பிரிவுகளில் ராஷ்ட்ரிய விஞ்ஞான் புரஸ்கார் விருதுகளை மத்திய அரசு வழங்குகிறது.

இத்துறையின் விஞ்ஞானிகள் தொழில்நுட்ப திறனாளிகள், படைப்பாற்றல் திறன் மிக்கவர்களுக்கு 4 தலைப்புகளின் கீழ் இவ்விருதுகள் வழங்கப்பட உள்ளது.

வரும் ஜனவரி 14ஆம் தேதிமுதல் 28ஆம் தேதிவரை தகுதியுடையவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

தேசிய தொழில்நுட்ப தினமான மே 11ஆம்தேதி விருதுகள் அறிவிக்கப்பட்டு, தேசிய விண்வெளி தினமான ஆகஸ்ட் 23ஆம் தேதி இவை வழங்கப்படும்.

விஞ்ஞான் ரத்னா, விஞ்ஞான் ஸ்ரீ, விஞ்ஞான் யுவ சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விஞ்ஞான் குழு விருதுகள் ஆகும் இவை.

**********

ஜி-20

இந்தியாவின் ஜி-20 தலைமைத்துவத்தின் கீழ் உள்கட்டமைப்பு 4ஆவது பணிக்குழு கூட்டம் மத்திய பிரதேச மாநிலம் கஜிராஹோவில் இன்று தொடங்கியது.

இந்த இரண்டு நாள் கூட்டத்தில் பல்வேறு நாடுகளை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

கட்டமைப்பு முதலீடுகள், மேம்பாடு, தரமான நகர்புற கட்டமைப்பு, தொழில்நுட்பம், நிதி ஆதார பரிவர்த்தனைக்கான புதுமையான கருவிகள், நீடித்த உள்ளடக்கிய வளர்ச்சி உள்ளிட்ட அம்சங்கள் குறித்து இதில் விவாதிக்கப்படுகிறது.

மத்திய நிதியமைச்சகம் சார்பில் நடைபெறும் இந்த மாநாட்டில் வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கான சிறப்பு யோகா பயிற்சி இன்று காலை நடைபெற்றது.

**********

உச்சநீதிமன்றம்

காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை நடைமுறைபடுத்துமாறு கர்நாடகத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு தாக்கல் செய்த கூடுதல் மனு மீது விசாரணை மேற்கொண்ட உச்சநீதிமன்றம் காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி

ஒழுங்காற்று குழுவின் உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி ஒழுங்காற்று உத்தரவுகளை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட அனைத்து மேல்முறையீட்டு மனுக்களையும் நிராகரித்துள்ள நீதிமன்றம் இந்த உத்தரவுகளை ஏற்க முடியாது என்று கூறுவது தவறு என்றும் அறிவுறுத்தியுள்ளது.

காவிரி மேலாண்மை ஆணையம் தமிழகத்திற்கு கர்நாடகம் வரும் 26ஆம் தேதிவரை 5 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிட உத்தரவு பிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**********

துரைமுருகன்

முன்னதாக இன்று செய்தியாளர்களிடம் பேசிய மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் காவிரி பிரச்சனையில் உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அனைத்து கட்சி கூட்டம் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

**********

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ள நிலையில் சென்னை புறநகர் பகுதிகளில் நடைபெற்றுவரும் சாலை மேம்பாடு, மழைநீர் வடிகால் பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று ஆய்வு செய்தார்.

7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் வேளச்சேரி, ஆலந்தூர் பகுதிகளில் சாலை பணிகளை நேரில் பார்வையிட்ட முதலமைச்சர் பணி முன்னேற்றம் குறித்த அறிக்கை அளிக்குமாறு உத்தரவிட்டார்.

சென்னை மெட்ரோ ரயில் பணிகளை போக்குவரத்திற்கு இடையூறு இன்றி மேற்கொள்வதற்கும் இப்பணிகளை விரைந்து முடிக்கவும் அவர் ஆணை பிறப்பித்தார்.

மேலும் மணப்பாக்கம், கொளப்பாக்கம், கிறுகம்பாக்கம், ராமாபுரம் திருவள்ளுவர் சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை பணிகளையும் முதலமைச்சர் ஆய்வு செய்தார்.

**********

தா.மோ.அன்பரசன்

தமிழ்நாட்டில் தொழில்முனைவோர்கள் பட்டா பெறுவதற்கான சிறப்பு முகாம் இன்றுமுதல் வரும் 30ஆம் தேதிவரை நடைபெறும் என்று மாநில சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் கிண்டியில் இதற்கான முகாம் இன்று தொடங்கப்பட்டதாக கூறினார்.

வாய்ஸ்

**********

தங்கம் தென்னரசு

தஞ்சையில் சோழர் அருங்காட்சியகம் அமைப்பதற்கான பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று மாநில தொல்லியல் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதேபோல் கங்கை கொண்ட சோழபுரத்திலும் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்றார்.

**********

செஞ்சிமஸ்தான்

கனடாவில் வசிக்கும் தமிழர்களின் பாதுகாப்பு குறித்து வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சிமஸ்தான் சென்னையில் நாளை ஆலோசனை மேற்கொள்கிறார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடுகிறார்.

**********

நீலகிரி

நீலகிரி மாவட்டம் கூடலூர் வனபகுதியில் நள்ளிரவில் விலங்குகளை வேட்டையாட சென்ற 5 பேரை வனத்துறை கைதுசெய்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

**********

இருவரி

திருவாரூர் மாவட்டத்தில் இன்று நடைபெறுவதாக இருந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 29ஆம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் தங்கள் சந்தேகங்கள் மற்றும் தகவல்களை பெற சேவை மையத்தை தொடர்பு கொள்ளலாம் என ஆட்சித்தலைவர் திருமதி கற்பகம் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் மத்திய அரசின் வித்யாலெட்சுமி கல்வி கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 91 மாணாக்கருக்கு 4 கோடியே 11 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை ஆட்சித்தலைவர் திரு.ஜெயசீலன் இன்று வழங்கினார்.

நாகை மாவட்டத்தில் உள்நாட்டு மீனவர்கள் 50 சதவிகித மானியத்துடன் மீன்பிடி வலைகள் வாங்க விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு.ஜானி டாம் வர்க்கீஸ் தெரிவித்துள்ளார்.

**********

வானிலை

குமரிக்கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக கோவை நீலகிரி தேனி திண்டுக்கல் தென்காசி திருநெல்வேலி கன்னியாகுமரி மதுரை சேலம் நாமக்கல் கிருஷ்ணகிரி தர்மபுரி திருப்பத்தூர் மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலைஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இப்பகுதிகளில் நாளையும் கன மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

**********

மகளிர் கிரிக்கெட்

சீன ஹாங்ஸூவில் நடைபெறும் ஆசிய விளையாட்டு போட்டிகளில் மகளிர் 20-20 கிரிக்கெட் அரையிறுதிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

மழைக்காரணமாக காலிறுதி போட்டி கைவிடப்பட்டதை அடுத்து மலேசியாவை விட சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்திய இந்தியா அரையிறுதிக்கு தகுதிபெற்றது.

**********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

**********